சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.28.08.2025.
O.S.No.4/2022
DW 1 : கணேசன் (வயது 66 ) த/பெ.அப்பாராசு
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கோடு வாதி தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு எண்.1/2022 ல் என்ன விவரங்கள் கூறி, எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி இடைக்கால மனு சம்மந்தமாக இந்த வழக்குரையுடன் வந்த அறிவிப்பினை நான் வாங்கி கொண்டேனா என்றால் இல்லை. வாதி வழக்குடன் என்ன இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளார் என்று எனது வழக்கறிஞரை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணைகளில் மற்றும் இடைக்கால மனு சம்மந்தமாக நீதிமன்ற அறிவிப்புகளில் சம்மன் சார்வு செய்யப்பட்டதற்கான கையெழுத்துக்கள் மற்றும் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் என்னுடைய கையெழுத்து மாதிரி தான் தெரிகிறது.

மேற்படி இடைக்கால மனு அறிவிப்புகளில் 07.03.2022 ஆம் தேதியன்று எனக்கு அறிவிப்பு கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நாள் அதிகமாகிவிட்டது என்பதால் என்னால் ஞாபகப்படுத்த முடியவில்லை. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற கட்டளை ஆவணங்களில் 07.03.2022 ஆம் தேதி எனக்கு அறிவிப்பு கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கண் கண்ணாடி போடாததால் எழுத்துக்கள் சரியாக தெரியவில்லை என்று கூறுகிறார்.

மேற்சொன்ன இடைக்கால மனுவில் எனது சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வதற்காக அனுமதி கோரப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை தங்கராஜ் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் பணம் வாங்கியது வகையில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எனது

வழக்கறிஞர் சொன்னார். அதற்கு மேல் அந்த வழக்கில் அதை தவிர வேறு விவரங்கள் எதையும் எனது வழக்கறிஞர் என்னிடம் சொல்லவும் இல்லை, நான் அது குறித்து கேட்கவும் இல்லை என்று கூறினால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் கடன் வாங்கியது சம்மந்தமாக தங்கராஜ் என் மீது வழக்கு போட்டுள்ள விவரமும் அதற்கு எனது சொத்தை முன் ஜப்தி செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ள விவரமும் எனக்கு நன்கு தெரிந்து கொண்டே வழக்கிற்காக அது பற்றி தெரியவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு பூவாளுர் கிழக்கு கிராமத்தில் சர்வே எண்.52/3பி2 என்ற நிலத்தில் 24.5 ஏர்ஸ் அளவுள்ள நிலம் இருந்தது என்றால் நிலம் இருக்கிறது அதன் சர்வே எண் ஞாபகம் இல்லை. அதே கிராமத்தில் சர்வே எண்.58/3ல் 8.50 ஏர்ஸ் அளவுள்ள நிலம் பட்டா எண்56ல் இருந்ததா என்றால் இருந்தது, தற்போது இல்லை. அதேபோல் அதே கிராமத்தில் பட்டா எண்.605ல் சர்வே எண்.151/23பி -ல் 40.50 ஏர்ஸ் அளவுள்ள நிலம் இருந்ததா என்றால் சர்வே எண், பட்டா எண் சரியாக தெரியவில்லை. எனக்கு தற்போது நிலம் எதுவும் இல்லை.

மேற்படி சர்வே எண்கள், பட்டா எண்களில் எனக்கு சொந்தமாக நிலங்கள் இருந்தது என்றும் வழக்கிற்காக அதனை மறுத்து பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சர்வே எண், பட்டா எண்கள் சரியாக ஞாபகம் இல்லை. ஏற்கனவே அந்த கிராமத்தில் எனக்கு நிலங்கள் இருந்தது, தற்போது இல்லை. எனது மனைவி பெயர் சரஸ்வதி. எனது மனைவிக்கு 30.08.2024ல் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளேனா என்றால் ஆமாம்.

மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனக்கு சொந்தமான 151/23பி புலத்தில் கண்ட சொத்தினை எபதி வைத்துள்ளேன் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த வழக்கில் முன்ஜப்திமனு நிலுவையில் இருப்பது பற்றி தெரிந்தே இடைக்கால மனுவில் கண்டுள்ள சொத்தை வேண்டுமென்றே எனது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக மாற்றி வைத்துள்ளேன் என்றால்

சரியல்ல.எனது மகன் பெயர் கோகுல்நாத் என்றால் சரிதான். 18.10.2023 ஆம் தேதி எனது மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேனா என்றால் ஆமாம். அதன் சர்வே எண் என்ன என்று ஞாபகம் இல்லை, ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

இடைக்கால மனுவின் முதல் அட்டவணை சொத்தான 52/3 பி2 புலத்தில் உள்ள சொத்தை செட்டில்மெண்ட் ஆவணமாக எனது மகனுக்கு எழுதி வைத்துள்ளேன் என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை. எனது மகன் கோகுல் நாத், செட்டில்மெண்ட் மூலம் வந்த சொத்தை சரண்யா என்பவருக்கு பதிவு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தும் இடைக்கால மனுவில் கண்டுள்ள 1 வது அட்டவணை சொத்து சர்வே எண் என்றால் தெரியவில்லை.

வாதியிடம் நான் பணம் வாங்கி கொண்டு அந்த பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எனக்கு சொந்தமான இடைக்கால மனுவில் கண்டுள்ள சொத்துக்களை எனது மனைவி மற்றும் மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி வைத்து அதன் அடிப்படையில் எனது மகன் ஏற்படுத்தி கொடுத்த கிரயமும் செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் எதிருரையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அதே போல் என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் கண் கண்ணாடி இல்லாமல் என்னால் சரியாக பார்க்க முடியவில்லை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது மாதிரி தெரியவில்லை.

**<u>கு.வி தொடர்ச்சி</u>**- மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
கணேசன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி